DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.03/2018**

அ.சா.12

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. வசந்த்குமார் | Caste: | |
| Father's Name: | முருகானந்தம் | Calling: | காவல் ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 40 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.03.2026

( 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. இலவச சட்ட உதவி வழக்கறிஞர் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2017ம் தேதி கீழக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது அதிகாலை 4.00 மணிக்கு இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து காலை 6.00 மணிக்கு மருத்துவமனை சென்று அங்கு தீக்காய பிரிவில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திண்டுக்கல் மாவட்டம் சின்னாலப்பட்டி இருப்பு கீழக்கரை செங்கல் நீரோடையில் உள்ள மூர்ஸ்டிராவல்ஸ்க்கு சொந்தமான தோப்பில் குடியிருந்த பெத்தான் மகன் பாண்டி என்பவரை விசாரணை செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:33 +0530

வாக்குமூலத்தில் மேற்படி பாண்டியின் கைரேகையை பெற்றேன். அதற்கு சாட்சியாக அவருக்கு மருத்துவமனையில் துணையாக இருந்த குமாரி என்பவரிடம் கையெழுத்து பெற்றேன். பின்பு காலை 8.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய கு.எண்.121/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 342, 450, 307 IPC and sec 3(2)(va) of SC/ST (POA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.9**. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10**. முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக கீழக்கரை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

இவ்வழக்கின் புகார்தாரர் கள்ள உறவில் இருந்ததால் ஏற்பட்ட குடும்ப பிரச்சனையின் காரணமாக தன்னை தானே அவர் தீ வைத்துக்கொண்டு பொய்யாக சங்கதிகளை சொல்லி புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக புகார் வாக்மூலம் பெறுவதற்காக மருத்துவமனை செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:39 +0530

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:47 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)